சிந்தனை
தொகுதி V
இதழ் I, II - 1993

# யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் இறந்த கால அமைப்பு

— இ. கயிலைநாதன் —

உலகிலே சில மொழிகள் எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு என இரு பெரும் வழக்கினைக் கொண்டவை. இவ்விரு வழக்குகளும் அமைப்பிலே வேறுபடுபவை. இம்மொழிகளில் பேச்சு வழக்கினை அறிந்த ஒருவர் எழுத்து வழக்கினைச் சம்பிரதாயப்படி கற்றே அறிந்து கொள்ள முடியும். இரு வழக்குகள் கொண்ட மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றாகும். எழுத்துத் தமிழும், பேச்சுத் தமிழும் இலக்கண அமைபுக்களில் பெரிதும் வேறுபடுகின்றன. இவ் வேறுபாடுகளை ஒப்பிட்டு ஆராய்வது பயனுள்ள முயற்சியாகும். ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் இரு வழக்குகளின் தன்மை, போக்கு, வரலாறு முதலியனபற்றி அறிந்து கொள்ளலாம். தமிழ் மொழியைத் தாய் மொழியாகப் பேசும் மாணவர்களுக்கு எழுத்து வழக்கைக் கற்பிக்கும் போது கற்றலிலும், கற்பித்தலிலும் எழும் சிக்கல்கள் பற்றி அறிந்து கொள்ளலாம். ஒப்பிட்டு ஆராய்வதற்கு முதலில் இருவழக்குகளின் அமைப்புக்களைத் தனித் தனியே விளக்குதல் வேண்டும். அதன் பின்னரே ஒப்பிட்டு ஆராய்தல் கூடும்

தமிழ் மொழி எழுத்து வழக்கில் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என முக்காலங்கள் உண்டு; இதேபோன்று பேச்சு வழக்கிலும் இம் முக்காலங்களும் உண்டு. ஆயின் இரு வழக்குகளிலும் காலங்களின் அமைப்பு மிக வேறுபடுகின்றது. யாழ்ப்பாணத் தமிழ்ப் பேச்சு வழக்கில் இறந்த கால அமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது; இவ்வமைப்பில் காணப்படும் தனித்தன்மைகள் யாவை எனக் காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

பொதுவாக எழுத்துத் தமிழிலாயினும் பேச்சுத் தமிழிலாயினும் வினை அடிச் சொற்கள் வினை முற்றாகப் பயன்படுத்தப்படும் போது அவை காலங் காட்டும் விகுதி, பால் காட்டும் விகுதி, எண் விகுதி, இடவிகுதி, ஆகியனவற்றை ஏற்று விைமுற்றாக அமைகின்றன. இருவழக்குகளிலும் வினை அடிகள் (Verb roots) ஏவல வினையாகவும் தொழிற்படுவன.

யாழ்ப்பாணப் பேச்சு மொழியில் வினை அடிச் சொற்கள், இறந்தகால அடிச்சொல் ( Past tense base ) ஆகுமாற்றை முதற்கண் பார்ப்போம். இதனை விளக்குவதற்கு முன் வினை அடிகளின் தனிச் சிறப்பு வாய்ந்த வகைப்பாட்டினை விளங்கிக் கொள்ளுதல் வேடீடும்.

வினைச் சொற்கள் வல்வினை (Strong Verbs) மெல் வினை (Weak Verbs) என இருவகைப்படும். வினைஅடி ஒன்று வினையெச்சமாவதற்கு -க்க எனும் விகுதியை ஏற்றால் அது வல்வினையைச் சார்ந்ததாகும். - அ எனும் விகுதியை ஏற்றால் அது மெல் வினையைச் சார்ந்ததாகும். படி - படிக்க, எழுது - எழுத, என்பன எடுத்துக்காட்டு.

இனி யாழ்ப்பாணப் பேச்சு மொழியில் இறந்த கால விகுதிகள் பலவுண்டு. இந்த வினை அடி இறந்த காலத்தைக் காட்டுவதற்கு இந்த விகுதியை ஏற்கும் என ஓர் ஒழுங்கு முறையில் வினையடிகள் அனைத்திற்கும் திட்டவட்டமாகக் கூறுவது எளிதன்று. ஆனால் சில வினை அடிகளைப்

பொறுத்த வரையில் மட்டும் அவை இறந்த காலத்தைக் காட்டுவதற்கு ஏற்கும் விகுதிகளைத் திட்டவட்டமாகக் கூறமுடியும்.

முதலில் வல்வினைச் சொற்களைக் கருத்திற் கொள்வோம்:– அ என்னும் ஒலியை ஈற்றில் கொண்டு முடியும் வல்வினைச் சொற்கள் அனைத்துமே –ந்த்– பெற்று இறந்த கால வினை அடியாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக மற, பற, நட போன்றவை மறந்த்–, பறந்த்–, நடந்த்– என அமைவதைக் காண்க. இரு, வச்சிரு ஆகிய இரு வல்வினைகளும் இறந்த காலத்தைக் காட்ட -ந்த்- விகுதியையே ஏற்கின்றன: இருந்த்–, வச்சிருந்த்–, வல்வினை அடியின் ஈற்றிலே -இ, -ய் அல்லது -ஐ உளது எனின் அது இறந்த காலத்தைக் காட்ட -ச்ச்- எனும் விகுதியை ஏற்கும். எடுத்துக்காட்டாக வாசி, காய், கதை போன்ற வினை அடிகள் வாசிச்ச்-, காய்ச்ச்-, கதைச்ச்-, என இறந்த கால வல்வினை அடியாக அமைவதைக் கருதுக. மேலே குறிப்பிடாத உயிரொலி ஒன்றில் வல்வினை அடி முடியுமாயின் அது இறந்த காலத்தைக் காட்டுவதற்கு -த்த்- என்னும் விகுதியை ஏற்கும். எடுத்துக்காட்டாக குடு- குடுத்த்-, படு-படுத்த்- என அமையும்.

உயிரொலிகளில் முடியும் வல்வினைச் சொற்களோடு ஒப்பு நோக்கும் போது மெய்யொலிகளில் முடியும் வல்வினைச் சொற்கள் குறைவாகும். அவை இறந்த கால அடியாக அமையும்போது ஏற்படும் மாற்றங்கள் சிக்கலானவையாகும். மெய்யில் முடியும் வல்வினைகள் ஏற்கும் இறந்த கால விகுதிகள் வெவ்வேறாகும். இவற்றுள் குறிப்பிட்ட மெய்யொன்றில் முடிவுறும் வினை குறிப்பிடக்கூடிய இறந்தகால விகுதியொன்றை ஏற்கும் என உறுதியாகச் சொல்லக்கூடிய ஒரு நிலை இல்லை. எடுத்துக்காட்டாக கேள்-, நில்-, வில், பார்-, ஆகிய வினைகளைப் பார்ப்போம். இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு இறந்தகால விகுதியை ஏற்பதைக் காண்க: கேட்ட் -, நிண்ட்-, வித்த் -, பாத்த்-, .

இனி மெல்வினைகளை நோக்குவோம். இவற்றுள் குறிப்பிட்ட ஒரு வினை எந்த இறந்தகால விகுதியை ஏற்கும் என ஓரளவு கூறத்தக்கதாக உள்ளது.

குறிலை அடுத்து 'டு' பெற்று முடியும் மெல்வினைகள் -ட்ட்- எனும் இறந்த கால விகுதியை ஏற்கின்றன. எடுத்துக்காட்டு: சாப்பிடு சாப்பிட்ட்-, நடு நட்ட்-, இறந்தகால விகுதியை ஏற்கும்போது 'டு' கெட்டுவிடுகின்றது. ஈற்றிலே-ர் கொண்டு முடியும் மெல்வினைகள் -ந்த்- எனும் இறந்த கால விகுதியை ஏற்கின்றன; ஏற்கும்போது -ர் கெட்டுவிடுகிறது. எடுத்துக்காட்டு, சேர் சேந்த்-. -ழ் அல்லது ழு என முடிவுறும் மெல்வினைகள் சிலவும் -ந்த்- ஏற்று இறந்த காலத்தைக் காட்டும். எடுத்துக்காட்டாக, இகழ் இகழ்ந்த்-, விழு- விழுந்த்-. மெல்வினைகளுள் தா-, வா-, கொண்ட-, ஆகியவையும் -ந்த்- பெற்று இறந்தகாலத்தைக் காட்டுகின்றன. இதனை விதிவிலக்கெனக் கொள்தல் வேண்டும்.

'ன்' அல்லது 'ண்' அல்லது 'ள்' கொண்டு முடியும் மெல்வினைகள் இறந்த காலத்தைக் காட்ட –ண்ட்– எனும் விகுதியைப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, காண் – கண்ட் –, தின் – திண்ட் –, விகுதியை ஏற்குப்போது வினை அடிகள் தம் ஈற்று எழுத்தை இழந்துவிடுவதாகக் கொள்கின்றோம்: தின் + ண்ட்>திண்ட் –, காண் எனும் வினைஅடியின் ஆகாரம் இறந்தகால விகுதியை ஏற்கும்போது அகரமாகிவிடுகிறது. மேலே 'ழ்' கொண்டு முடியும் சில வினை அடிகள் இறந்த காலத்தைக் காட்டுவதற்கு – ந்த் – எனும் விகுதி ஏற்பதைக் கூறினோம். அத்தகைய வினை அடிகள் சில இறந்த காலத்தைக் காட்டுவதற்கு - ந்த் – எனும் விகுதியை ஏற்காது – ண்ட் – விகுதியை ஏற்பதும் உண்டு. எடுத்துக்காட்டாக தவழ் – தவண்ட் –, போன்றவற்றைக் காண்க. 'இ' அல்லது 'ய்' அல்லது 'ஐ' கொண்டு முடியும் மெல்வினைகள் இறந்தகாலத்தைக் காட்டுவதற்கு – ஞ்ச் – எனும் விகுதியை ஏற்கின்றன. எடுத்துக்காட்டாக அறி – அறிஞ்ச் – தோய்– தோஞ்ச் –, நனை – நனைஞ்ச் – எனக் காட்டலாம். – ஞ்ச் – விகுதியை ஏற்கும்போது ஈற்று 'ய்' கெட்டுவிடுகிறது. இனி மெல்

வினைகளுள் மிகப் பல இறந்த காலத்தைக் காட்டுவதற்கு – இன் – விகுதியை ஏற்கின்றன. மெல்வினைகளுள் எவை எவையெல்லாம் – இன் – விகுதியை ஏற்கின்றன என முழுமையாகத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. எனினும் பின்வரும் மெல்வினை வகைகள் – இன் – விகுதியை ஏற்கின்றன எனக் கூறலாம்: (அ) வினை அடிச் சொற்கள் இரு மெய் எழுத்துக்களுடன் 'உ' கரத்தைக் கொண்டு முடித்தால் ($C_1C_2$உ) அல்லது இரட்டித்த மெய் எழுத்துக்களுடன் 'உ' கரம் கொண்டு முடித்தால் ( – ல்லு என முடிபவை தவிர ) ($C_1C_1$உ) அவை – இன் – என்னும் இறந்தகால விகுதியை ஏற்கும். எடுத்துக்காட்டாக தொடங்கு – தொடங்கின், திரும்பு – திரும்பின், அடுக்கு – அடுக்கின், காட்டு – காட்டின். (ஆ) வினை அடிச் சொற்களின் ஈற்று மெய் எழுத்து 'உ' கரத்துடன் சேர்ந்து அதன் முன் நெட்டுயிர். உடையதாய் முடிந்தால் அவை – இன் – விகுதியை ஏற்கும். எடுத்துக்காட்டாக பேசு – பேசின் –, ஏறு – ஏறின் –, தேடு – தேடின் –. (இ) 'உ' கரத்தை ஈற்றில் கொண்டு மூன்று குற்று அசையைக் (three Short Syllables) கொண்ட வினை அடிச் சொற்கள். எடுத்துக்காட்டாக கழுவு, எழுது, உதவு ; போன்றவை கழுவின் –, எழுதின் –, உதவின் –, என – இன் – விகுதியை ஏற்கின்றன. இவ்வினை அடிச் சொற்களில் வரும் 'உ' கரம் – இன் – விகுதியின் முன் கெட்டுவிடும்.

இதுவரை யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் காணப்படும் இறந்தகால வினை அடி வடிவங்கள் எவ்வாறு அமைகின்றன எனப் பார்த்தோம். இனி பயன்பாட்டிலே இவ் வினை வடிவங்கள் சிலவற்றில் தோன்றும் தனித் தன்மைகளைக் கவனிப்போம்.

இறந்தகாலத்திற்கு – இன் - விகுதியை ஏற்கும் வினையடிகள் யாவும் அஃறிணை வினைமுற்று வடிவங்களிலும் உயர்திணைப் பன்மைப் படர்க்கை வினைமுற்று வடிவங்களிலும் அந்த – இன் – விகுதியை - இச்ச் - என உருமாற்றிக் கொள்கின்றன. அதாவது –இன் - எனும் இறந்தகால விகுதி – இனம், – உது, – உதுகள் ஆகிய விகுதிகளுள் ஒன்று அடுத்து வரும்போது – இச்ச் - ஆக மாறிவிடுகிறது. இதனைப் பின்வரும் ஆடு எனும் வினையடியின் வினைமுற்று வாய்பாடு தெளிவாக்கும்.

வினையடி : ஆடு

| | | |
|---|---|---|
| நான் ஆடினென் | – | ( ஆடு + இன் + என் ) |
| நாங்கள் ஆடினம் | – | ( ஆடு + இன் + அம் ) |
| நீ ஆடினாய் | – | ( ஆடு + இன் + ஆய் ) |
| நீர் ஆடினீர் | – | ( ஆடு + இன் + ஈர் ) |
| நீங்கள் ஆடினீங்கள் | – | ( ஆடு + இன் + ஈங்கள் ) |
| | | அல்லது |
| நீங்கள் ஆடினியள் | – | ( ஆடு + இன் + இயள் ) |
| அவர் ஆடினார் | – | ( ஆடு + இன் + ஆர் ) |
| அவன் ஆடினான் | – | ( ஆடு + இன் + ஆன் ) |
| அவங்கள் ஆடினாங்கள் | – | ( ஆடு + இன் + ஆங்கள் ) |
| அவா ஆடினா | – | ( ஆடு + இன் + ஆ ) |
| அவள் ஆடினாள் | – | ( ஆடு + இன் + ஆள் ) |
| அவளவை ஆடினாளவை | – | ( ஆடு + இன் + ஆளவை ) |
| அவை ஆடிச்சினம் | – | ( ஆடு + இச்ச் + இனம் ) |
| அது ஆடிச்சுது | – | ( ஆடு + இச்ச + உது ) |
| அதுகள் ஆடிச்சுதுகள் | – | ( ஆடு + இச்ச் + உதுகள் ) |

இறந்தகால விகுதியாக - இச் - வல்வினைகள் சிலவற்றுடன் வருவது முன்னர் கூறப்பட்டது. எடுத்துக்காட்டாக படிபடிச்சினம். இங்கு - இச்ச - பிறிதொரு விகுதியின் உருமாற்றம் எனக் கொள்ளப்படவில்லை. இங்குமட்டும் கொண்டுள்ளோம். இச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான அமிசத்தைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். இறந்த காலத்திற்கு - இன் - விகுதி தவிர்ந்த ஏனைய விகுதிகளுள் ஒன்றை ஏற்று வரும் அனைத்து வினையடிகளும் - வல்வினையாயினும் மெல்வினையாயினும் - அடுத்து - இனம் அல்லது - உது அல்லது - உதுகள் வரும் - போது தாம் ஏற்கும் இறந்தகால விகுதியுடன் - இச் - எனும் விகுதியையும் கட்டாயமற்ற முறையில் ( (Optionally) ஏற்றுவரக் காண்கிறோம். எடுத்துக் - காட்டாக நட, நடக்க, நடந்தினம் ~ நடந்திச்சினம்; நில், நிக்க நிண்டினம் ~ நிண்டிச்சினம்; போடு, போட, போட்டினம் ~ போட்டிச்சினம்; அறி, அறிய, அறிஞ்சினம் ~ அறிஞ்சிச்சினம். ஆனால் இப்படி வருவதை அஃறிணையில் காணோம். நடந்துது என வருகிறது, நடந்திச்சுது என வருவதில்லை; நிண்டுது என வருகிறது, நிண்டிச்சுது என வரக் காணோம்.

மேலே குறிப்பிட்ட வடிவங்களில் மேலதிகமாக வரும் - இச் - யாது? ஏன் அவ்வாறு வருகிறது? - இன் - எனும் விகுதியே - இச் - என மாறுகிறது எனக் கொண்டோம். - இனம் விகுதி இறந்தகால விகுதி - இன் - போல இருப்பதனால், - இச் - எனவும், ஒரு விகுதி வந்துவிடுகிறதா? இங்கு அவ்வாறு கருதும்போது அந்த - இனம் எனும் விகுதி - இச் - ஆக உரு மாறுவதாகக் கருத முடியாது. அன்றி இரண்டு இறந்தகால விகுதிகள் வருகின்றன எனக் கொள்ளலாமா? நடந்தினம் என்பதில் - ந்த் - இறந்தகால விகுதி. நடந்திச்சினம் என்பதில் - ந்த் -, இச் - ஆகிய இரண்டுமே இறந்தகால விகுதி எனலாமா? இரண்டு பன்மை விகுதிகளை ஏற்கும் பெயர்கள் வழக்கில் உண்டு. ஆசிரியன், ஆசிரியர், ஆசிரியர்கள், ஆசிரியர்மார் போன்றவற்றில் - ர் பன்மையைக் குறிக்கலாம்; - கள் - - மார், ஆகிய இரண்டும் மேலும் பன்மையைக் குறிப்பன. இறந்தகால விகுதி ஒன்றை ஏற்ற வினைகளுடன் - இச் - மேலதிகமாக வருவது சிந்தனைக்குரியது. இப்பண்பு யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் காணப்படும் ஒரு தனித் தன்மையாகும். இதனை ஒரு மாதிரியாக இங்கு தருகின்றோம். இது போன்ற தனித் தன்மைகள் இன்னும் சில உண்டு. □

---

## உசாத்துணை நூல்கள்


1. James N. Gair and Suseendirarajah, S. (1981) "Some Aspects of the Jaffna Tamil Verbal System" *International Journal of Dravidian Linguistics*, Vol.X, No.2. Kerala.

2. James W. Gair, Suseendirarajah, S., Karunatilake, W.S. (1978) *An Introduction to Spoken Tamil*, External Serviecs Agency, University of Sri Lanka.

3. Suseendirarajah, S. (1967) *A Descriptive Study of Ceylon Tamil* (with special reference to Jaffna Tamil), Ph.D. diss. (Unpublished) Annamalai University, India.